தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

6.03.2013 A.M

## உணவுப் பதப்படுத்துதல் பயிற்சி

புதுச்சேரி பல்கலைக்கழகம், பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றின் சார்பில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு உணவு பதப்படுத்துதல் குறித்த பயிற்சி வகுப்பு தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த குருமாம்பேட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. விழாவுக்கு விரிவாக்கவியல் வல்லுநர் வை.குமார் வரவேற்றார். புதுச்சேரி பல்கலைக்கழக இயக்குநர் மு.ராமதாஸ் பயிற்சியை தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் கோ.சுரேஷ், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சிவ.வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வயது வந்தோர் மற்றும் தொடர் கல்வி மையத் தலைவர் கே.தேவன் பயிற்சியின் நோக்கம் குறித்து விளக்கினார். மனையியல் வல்லுநர் ஆர்.விஜயலட்சுமி நன்றி கூறினார். இதில், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த 30 பெண்களுக்கு உணவுப் பதப்படுத்துதல் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் மூலம் அவர்கள் தங்கள் பகுதியிலேயே குடிசைத் தொழில் செய்து கூடுதல் வருமானம் பெறலாம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## பாலாறு-பொருந்தலாறு அணையிலிருந்து நீர் வெளியேற்றம் நிறுத்தம்

பழனி அருகே பாலாறு-பொருந்தலாறு அணையில் தேவையற்ற சானல்களில் வெளியேற்றப்பட்ட தண்ணீர் செவ்வாய்க்கிழமை முதல் நிறுத்தப்பட்டது.

பழனி நகர மக்களின் குடிநீர்த் தேவைக்கும், பழனிக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கும், பாலாறு-பொருந்தலாறு அணையில் இருந்து ராட்சதக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு, மேல்நிலைத் தொட்டிகளுக்கு ஏற்றப்படுகிறது.

மற்றொரு ஆதாரமான புளியமரத்து செட்டில் உள்ள கோடைகால நீர்த் தேக்கத்தில் தண்ணீர் முற்றிலும் வற்றிய நிலையில், பாலாறு அணையின் நீரையே பழனி மக்கள் நம்பியுள்ளனர். அணையின் உயரம் 65 அடி உயரம். இந்நிலையில், சுமார் 30 அடி உயரம் வரை தண்ணீர் விவசாயத்துக்கு வெளியேற்றப்பட்டும், மீதமுள்ள தண்ணீர் குடிநீர்த் தேவை மற்றும் மீன்கள் வாழ்வுக்கும் தேக்கப்படுகிறது.

தற்போது, தண்ணீர் 30 அடிக்கும் குறைவாக உள்ளது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக தேவையற்ற சானல்களில் தண்ணீர் வெளியேற்றம் செய்யப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வந்தது.

இது குறித்து, திங்கள்கிழமை தினமணி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை பழனி நகர்மன்றத் தலைவர் வேலுமணி, நகராட்சி ஆணையர் பாலகிருஷ்ணன், பொதுப்பணித் துறை உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவிப் பொறியாளர் மாணிக்கவேல் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

ஆற்றின் ஓரமுள்ள கிணற்றுப் பாசனத்துக்காக சிறிதளவு தண்ணீர் திங்கள்கிழமை மட்டும் வெளியேற்றப்பட்டதாகத் தெரிவித்த பொதுப்பணித் துறை அதிகாரிகள், உடனடியாக அதை நிறுத்தினர்.

இது குறித்து, உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன் கூறியது:

அணையில் இருந்து தற்போது தாடாகுளம் மதகு வழியாக மட்டுமே விநாடிக்கு 10 கனஅடி நீர் பாசனத்துக்காக வெளியேற்றப்படுகிறது. குறிப்பிட்ட பாசனப் பகுதிக்கு விநாடிக்கு 20 கனஅடி நீர் தேவையுள்ள நிலையில், தண்ணீர் வரத்து இல்லாததால் 10 கனஅடி நீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது.

பழனிக்கு வேண்டிய குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் போதிய அளவு இருப்பு உள்ளது. இதனால், 6 மாத காலத்துக்கு குடிநீர்த் தேவையை மக்கள் சமாளிக்கலாம் என்றார்.

பழனி நகர்மன்றத் தலைவர் வேலுமணி, ஆணையர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்ததாவது:

பழனிக்கு குடிநீர்த் தேவைக்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு, பல பகுதிகளில் போர்வெல் போடும் பணிக்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. கோடைகால நீர்த் தேக்கத்தை தூர்வாரி பரப்பளவை அதிகப்படுத்த சுமார் ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள்

மேற்கொள்ளப்படும். தண்ணீர் வரும் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளும் விரைவில் அகற்றப்படும்.

பழனி மக்களுக்கு கோடைகாலத்தை சமாளிக்கும் விதமாகவும், பங்குனி உத்திரத் திருவிழாவை திறம்பட நடத்தி முடிக்கவும், போதிய குடிநீர்த் தேவைக்கு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தனர்.

ஆய்வின்போது, பொதுப்பணித் துறை, நகராட்சி அலுவலர்கள், பொறியாளர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

## குவாதிமாலா ஏலக்காயால் உள்நாட்டு ஏலக்காய் விலை பாதிக்காது

குவாதிமாலா ஏலக்காய் இறக்குமதியால், உள்நாட்டு ஏலக்காய் விலையில் பாதிப்பு ஏற்படாது, என ஸ்பைசஸ் வாரியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, கொச்சி ஸ்பைசஸ் வாரியத்தின் விளம்பரத் துறை துணை இயக்குநர் டாக்டர் பி.எஸ். ஸ்ரீகண்டன் தம்பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

குவாதிமாலாவிலிருந்து ஏலக்காய் இறக்குமதி செய்யப்படுவதாக, சமீபத்தில் செய்திகள் வெளியானது. இதுபோன்ற தகவல் உள்நாட்டு ஏலக்காயின் விலையை குறைப்பதற்காக பரப்பப்பட்டு வருகிறது.

கடந்த 9 மாதங்களில் 200 டன் ஏலக்காய் மட்டுமே இறக்குமதியாகி உள்ளது. ஆனால், பிப்ரவரி 28 வரை சுமார் 8,776 டன் உள்நாட்டு ஏலக்காய் ஏல மையங்களுக்கு வந்துள்ளது. சராசரி விலையாக ரூ. 767 ஆக விற்பனையாகி உள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட ஏலக்காயின் அளவு வெறும் 2.27 சதவீதம் மட்டுமே. இதனால், உள்நாட்டு விலையில் எவ்விதமான பாதிப்பும் இல்லை.

தென்னிந்திய துறைமுகங்கள் வழியே ஏலக்காய் இறக்குமதி செய்யப்படுவதாக வந்துள்ள தகவல், ஏலக்காய் விற்பனைக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்துவதுடன், ஏல விவசாயிகளுக்கும் வீணான மனவருத்தத்தை தருவதுமாகும். கடந்த 2012 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும், 2013 துவக்கத்திலும் ஏலக்காய் இறக்குமதி நடைபெற்றிருந்தாலும், கடந்த 2012 இல் ஏலக்காயின் சராசரி விலை ரூ. 512 ஆகவும், 2012 ஜூன் முதல் 2013 ஜனவரி வரை ரூ. 696 முதல் ரூ. 787 வரையும் விற்கப்பட்டது.

மேலும், நேபாளம், பூடான், வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகள் வழியே சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் கடத்தப்படும் ஏலக்காய் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கும்படி, துறைமுகங்களிலுள்ள இறக்குமதித் துறை ஆணையர்களை ஸ்பைசஸ் வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

விவசாயிகள் இதுபோன்ற செய்திகளை நம்பவேண்டியதில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசின் ரூ. 1.26 கோடி மானியத்தை பெற விவசாயிகள் முன்வரவில்லை

விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் அனைத்து விதமான வேளாண் கருவிகள் வழங்குவதற்காக தமிழக அரசு ரூ. 1.26 கோடி மானியம் தந்தும், அதைப் பெற்றுச் செல்ல மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் முன்வரவில்லை என்று ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண் பொறியியல் துறையின் வட்டார உதவி வேளாண் பொறியாளர் ஈ. சங்கரசுப்பிரமணியன் தனது ஆதங்கத்தினைத் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் நடைபெற்றது. உதவி வேளாண் பொறியாளர் ஈ. சங்கர சுப்பிரமணியன் விவசாய இடுபொருள்களை வழங்கி சிறப்புரையாற்றிய போது கூறியதாவது: விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் 2012-13ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தமிழக அரசு விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விவசாயக் கருவிகள் வழங்க மானியத் தொகையாக ரூ. 1.26 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த மானியத் தொகையைக் கொண்டு, விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, விசைத் தெளிப்பான்கள், கைத்தெளிப்பான்கள், விசைக் களையெடுப்பான்கள், நெல் நடவு இயந்திரம், மினி டிராக்டர், பவர் டில்லர் கலப்பைகள் மற்றும் பலவிதமான கருவிகளை ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண் பொறியியல் துறை மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 60 சதவீத மானிய விலையிலும் வழங்கி வருகிறது.

இதில் விசைத் தெளிப்பான் வாங்குவதற்கு அதிகபட்சம் ரூ. 10 ஆயிரம் மானியம் தமிழக அரசு தருகிறது. மாட்டுத் தீவனம் வெட்டும் கருவி வாங்க ரூ. 25 ஆயிரம் மானியமும், மக்காச் சோளம் பிரிக்கும் இயந்திரத்துக்கு ரூ.80 ஆயிரமும், பல தானியம் கதிரடிக்கும் இயந்திரம் வாங்க ரூ. 1.50 லட்சமும், விசை களை எடுப்பான் இயந்திரத்துக்கு ரூ. 50 ஆயிரமும், சுழலும் கலப்பைக்கு ரூ. 20

ஆயிரமும், பவர் டில்லருக்கு ரூ. 45 ஆயிரமும், மினி டிராக்டர் வாங்க ரூ. 1.25 லட்சமும், நெல் நடவு மற்றும் நெல் அறுவடை இயந்திரத்துக்கு ரூ. 4 லட்சம் மானியமும் தமிழக அரசு வழங்குகிறது.

தற்போது 2012-13ஆம் நிதியாண்டில் அரசு மானியம் ரூ. 1.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அதை வாங்கிச் செல்ல விவசாயிகள் முன்வரவில்லை. தற்போது மார்ச் 31ஆம் தேதிக்குள் இயந்திரம் வாங்கும் விவசாயிகளுக்கு மட்டும் அரசு மானியம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி, தமிழக அரசு விவசாயிகளுக்கு தரும் சலுகைகளை பெற்று வாழ்வில் வளம் பெற வேண்டும். மானிய விலையில் விவசாயக் கருவிகளை வாங்க விரும்பும் விவசாயிகள் உடனடியாக ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம் என்றார். உதவி செயற்பொறியாளர் ப. செல்வராஜ் நன்றி கூறினார்.

## விவசாயிகள் முறையீட்டு கூட்டம் ஒத்திவைப்பு

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம், மார்ச் 15-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்டத்தில் விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் மாதந்தோறும் 2-ஆவது வெள்ளிக்கிழமை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கத் தலைவர்கள், பாசன சபைத் தலைவர்கள், விவசாயம் தொடர்பான குறைகளை மனுக்களாக வழங்கி தீர்வு பெறுகின்றனர்.

இந் நிலையில், வரும் வெள்ளிக்கிழமை (மார்ச் 8) நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம், சில நிர்வாகக் காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக அடுத்த வெள்ளிக்கிழமை (மார்ச் 15) இக் கூட்டம் நடைபெறும்.

## உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்தது

2012-13ஆம் ஆண்டில் உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளபோதும் விற்பனைத் தொகை அதிகரித்துள்ளது.

2000-இல் தி.மு.க. ஆட்சியில் உழவர் சந்தை தொடங்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை கட்டுபாட்டின் கீழ் மாநிலம் முழுவதும் 179 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

இதற்கான பராமரிப்புச் செலவுகள் அனைத்தையும் வேளாண் விற்பனைக் குழு ஏற்று நடத்தி வருகிறது. விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களை இடைத்தரகர்கள் இன்றி விற்பனை செய்யவும், நுகர்வோருக்கு தரமான காய்கறிகள், குறைந்த விலையில் கிடைக்கும் வகையிலும் இத் திட்டம் துவங்கப்பட்டது. வெளி மார்க்கெட் விலையை விட, 20 சதவீதம் குறைந்த விலையில் காய்கள் கிடைப்பதால், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

நடப்பாண்டு சரியான பருவமழை இல்லாததால், காய்கறி உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

உழவர் சந்தைக்கு வரத்தும் கணிசமாக குறைந்துவிட்டது. உணவில் தினமும் பயன்படுத்தும் காய்கறிகளின் தேவை அதிகம் உள்ளதால், விலையும் தாறுமாறாக உயர்ந்தது.

இதுகுறித்து, ஈரோடு மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அதிகாரிகள் கூறியது:

ஈரோடு மாவட்டத்தில் பெரியார் நகர், சம்பத் நகர், கோபி, சத்தி, பெருந்துறையில் உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. இதில், விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகளை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

நடப்பாண்டு சரியான பருவமழை இல்லாததால் காய்கறி விளைச்சல் பாதித்தது. 2011-12ஆம் ஆண்டில் இம் மாவட்ட உழவர் சந்தைகளுக்கு 17,076 மெட்ரிக் டன் காய்கறிகள் கொண்டு வரப்பட்டன.

2012-13-இல் 1,311 மெட்ரிக் டன் குறைந்து, 15,765 மெட்ரிக் டன் காய்கறிகள் வரத்தே இருந்தது. அதேபோல, 2011-12இல் ரூ.24.51 கோடிக்கு காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. 2012-13-இல் ரூ.26.69 கோடிக்கு காய்களை விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர். இது, கடந்த ஆண்டை விட ரூ.2.18 கோடி அதிகம். இன்னும் மார்ச் வரை உள்ளதால் இத் தொகை மேலும் அதிகரிக்கும் என்றனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.78 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 33.78 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 150 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 284 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.57.டி.எம்.சி.

## ஆவின் பாலகங்களில் ஊட்டி தேயிலை விற்பனை

வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஆவின் பாலகங்களிலும் அரசு ஊட்டி தேயிலை வியாழக்கிழமை முதல் விற்பனை செய்யப்படவுள்ளது.

இத் தகவலை ஆட்சியர் பொ.சங்கர் தெரிவித்துள்ளார்.

## மூன்று நாள்களுக்கு 12 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்பு

நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த மூன்று நாள்களுக்கு 3 மிமீ முதல் 12 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, நாமக்கல் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (மார்ச் 6 முதல் 8 வரை) வானம் பொதுவாக மேக மூட்டத்துடனும், 6-ஆம் தேதி 12 மிமீ, 7-ஆம் தேதி 5 மிமீ, 8-ஆம் தேதி 3 மிமீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 3 முதல் 4 கிமீ வேகத்தில் கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 21 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 35 டிகிரி செல்சியஸ் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்தபட்சம் 80 சதம் முதல் அதிகபட்சம் 90 சதம் வரையும் இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: மேக மூட்டம் காரணமாக, பகலில் நிலவும் அதிகபட்ச வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளது. இதனால், கோழிகளிடையே வெப்ப அயற்சி தற்சமயம் இருக்காது. இருப்பினும், வைட்டமின் சி, எலெக்ரோலைட் சத்துக்களை தீவனம் மற்றும் குடிநீரில் கலந்து கொடுப்பது கோழிகளின் வெப்ப அயற்சியை தாங்கும் திறனை அதிகப்படுத்தும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:தற்போது மரவள்ளிச் செடிகளில் அதிகளவில் காணப்படும் செம்பேன்கள், புதிதாக தோன்றும் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன.

இதைத் தவிர்க்க, மரவள்ளி சாகுபடி செய்யும்போது செம்பேன் பூச்சிக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட ரகமான ஸ்ரீஅதுல்யா நடவு செய்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வரத்து குறைந்தது; விலை உயரவில்லை

நிகழாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு குறைந்தும், போதிய வரத்தும், தேவையும் இல்லாததால் மருத்துவ குணங்கள் மற்றும் பயன்பாடு கொண்ட எலுமிச்சையின் விலை தற்போது குறைந்து காணப்படுகிறது.

தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தைத் தொடர்ந்து, எலுமிச்சை சாகுபடி அதிகம் நடைபெறும் மாவட்டங்களில் திருச்சியும், பெரம்பலூரும் அடங்கும். இவ்விரு மாவட்டங்களிலிருந்து 1180 முதல் 1200 ஹெக்டேர் வரை எலுமிச்சை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், நிகழாண்டில் மழை இல்லாததால் இந்த எண்ணிக்கையில் குறிப்பிட்ட அளவு சாகுபடி குறைந்துவிட்டது.

திருச்சி மாவட்டத்தில் கோட்டாத்தூர், சிக்கத்தம்பூர், நரசிங்கபுரம், பெருமாள்பாளையம், மணப்பாறை, பெரம்பலூர் மாவட்டத்தில் நாரணமங்கலம், வரகுப்பாடி, இரூர், நாட்டார்மங்கலம், மேட்டூர், அரும்பாவூர், மேலப்புலியூர், பூலாம்பாடி போன்ற பகுதிகளில் எலுமிச்சை சாகுபடி அதிகளவில் நடைபெறுகின்றன. இப்பகுதிகளிலிருந்து திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு எலுமிச்சை விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

வரத்தும், தேவையும் மிக அதிகமாக இருக்கும் சீசன் காலத்தில் (மார்ச் முதல் ஜூன் மாதம் வரையிலான காலம்) இந்த மார்க்கெட்டுக்கு தினசரி 2000 எலுமிச்சை மூட்டைகளும், மற்ற நாள்களில் குறைந்தது 500 மூட்டைகளும் வரத்து இருக்கும்.

ஆனால், நிகழாண்டில் சீசன் தொடங்கியும் போதிய எலுமிச்சை வரத்து இல்லை. தற்போது 200 முதல் 300 மூட்டை வரை வரத்து உள்ளது என்கின்றனர் எலுமிச்சை வியாபாரிகள்.

"சென்ற ஆண்டு எலுமிச்சைக்கு நல்ல விலை கிடைத்தது. பெரிய பழம் ரூ.2.50 முதல் ரூ. 3 வரை விற்பனையானது. ஆனால், இந்தாண்டு அந்த விலை கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

இந்தாண்டு போதிய மழை இல்லாததால் விவசாயிகள் செய்யும் எலுமிச்சையின் உற்பத்தி அளவும் குறைந்திருக்கிறது. மேலும், கேரளத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் எலுமிச்சை, தற்போது ஆந்திர மாநிலத்திலிருந்து அனுப்பப்படுவதால், திருச்சியிலிருந்து அனுப்பப்படும் எண்ணிக்கையும்

குறைந்திருக்கிறது. இதனால் கடந்த ஆண்டைக் காட்டிலும் எலுமிச்சைக்கு அதிக விலை கிடைப்பதற்கான வாய்ப்பில்லை. இந்தாண்டு பழம் ரூ. 1.50, ரூ. 1 என்ற விலையில் கூட கிடைக்கலாம். தற்போது 50 கிலோ கொண்ட எலுமிச்சை மூட்டை ரூ. 1200-க்கு விற்பனையாகிறது என்கிறார்' திருச்சி காந்திமார்க்கெட்டைச் சேர்ந்த எலுமிச்சை பழ வியாபாரி ஏ. ராமராஜ்.

உற்பத்தி நிலங்கள் விற்பனை நிலங்களாக மாற்றப்படுவது, இயற்கை உரங்களைப் பயன்படுத்தாமல் ரசாயன உரங்களைப் பயன்படுத்துவது போன்றவையும் எலுமிச்சை உற்பத்தி குறைவுக்கு காரணமாக அமைந்துவிடுகிறது என்கிறார் ராமராஜ்.

மருத்துவப் பட்டியலில் இணைக்க வேண்டும்: அழுகும் பொருள்கள் பட்டியலில் எலுமிச்சையை மத்திய அரசு வைத்திருக்கிறது. அந்த நிலையை மாற்றி, மருத்துவ ஆய்வுப் பயன்பாட்டு பட்டியலுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

தோட்டக்கலை வாரியத்தின் மூலம் சில ஆண்டுகளுக்கு எலுமிச்சை சாகுபடி மேற்கொண்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. தற்போது அந்த மானியமும் வழங்கப்படுவதில்லை. எலுமிச்சையை மருத்துவப் பயன்பாட்டுக்கு கொண்டு வருதலும் அவசியம் என்கிறார் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் செயலர் ஆர். ராஜா சிதம்பரம்.

### கரும்பு விவசாயிகளுக்கான ஆலோசனை முகாம்

கரும்பு விவசாயிகளுக்கான ஆலோசனை மற்றும் கடன் பற்றிய முகாம் அறந்தாங்கியில் செவ்வாய்கிழமை நடைபெற்றது.

அறந்தாங்கி குரும்பூர் சர்க்கரை ஆலை சார்பாக நடைபெற்ற முகாமில் மாசி மாதம் கரும்பு நடவு செய்யும் விவசாயிகளுக்கான தேவைகள் மற்றும் கடனுதவிகள் குறித்து ஆலையின் பொது மேலாளர் எஸ். ராதாகிருஷ்ணன், துணைப் பொது மேலாளர் அ. புண்ணியமூர்த்தி உள்ளிட்டோர் விளக்கினர்.

சூரிய ஒளியில் இயங்கும் மின் மோட்டார்களை கொண்டு கரும்பு வயல்களில் நீர் பாய்ச்சவது குறித்து சென்னை ஆச்சார்யா நிறுவனத்தினரும், கரும்பு விவசாயிகளுக்கு ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி வழங்கி வரும் கடன் மற்றும் குறைந்த வட்டி விகிதங்கள் குறித்து வங்கியின் வட்டார மேலாளர் டி. ஜெகன்மோகனும், இயற்கை விவசாயம் குறித்து அப்தா அவானா அமைப்பினரும், சொட்டு நீர் பாசனம் குறித்து ஆலையின் துணைப் பொதுமேலாளர் பிரான்சிஸ் சேவியர் உள்ளிட்டோரும்

விளக்கமளித்தனர். கரும்பு மேலாளர் எஸ். சிவராமன் நன்றி கூறினார். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 29.38 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 29.38 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 138 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் 4,004 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

### தென் தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தென் தமிழகம் மற்றும் வடகடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு இலங்கையின் தென் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது தற்போது தென்மேற்கு வங்கக்கடல் வரை பரவியுள்ளது.

தமிழகத்துக்கு அருகில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடிப்பதால் செவ்வாய்க்கிழமை மாநிலத்தின் பல இடங்களில் மழை பெய்தது.

டெல்டா மாவட்டங்களில் மழை: தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை அதிகாலை முதலே மழை பெய்தது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, கோட்டூர், முத்துப்பேட்டை, திருச்சி மாவட்டம் மணப்பாறை, லால்குடி, வையம்பட்டி, துறையூர், முசிறி, புதுக்கோட்டை மாவட்ட கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

ராமேசுவரம், பாம்பன், தனுஷ்கோடி, மண்டபம் உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் உள்பட மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

கனமழை வாய்ப்பு: இன்றைய மழை நிலவரம் குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது: குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அநேக இடங்களில் மழை பெய்யக்கூடும். தென் தமிழகம் மற்றும் வட கடலோர மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம். குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக அடுத்த சில நாள்களுக்கு மழை நீடிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்)

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை - 70, வேதாரண்யம், பாம்பன் - 40, ராமேசுவரம், திருவாரூர் மாவட்டம் அதிராமபட்டினம், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி - 20, தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர், நாகப்பட்டினம் - 10.

## தென் தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புதன்கிழமை (மார்ச் 6) மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தென் தமிழகம் மற்றும் வடகடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு இலங்கையின் தென் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது தற்போது தென்மேற்கு வங்கக்கடல் வரை பரவியுள்ளது.

தமிழகத்துக்கு அருகில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடிப்பதால் செவ்வாய்க்கிழமை மாநிலத்தின் பல இடங்களில் மழை பெய்தது.

டெல்டா மாவட்டங்களில் மழை: தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை அதிகாலை முதலே மழை பெய்தது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, கோட்டூர், முத்துப்பேட்டை, திருச்சி மாவட்டம் மணப்பாறை, லால்குடி, வையம்பட்டி, துறையூர், முசிறி, புதுக்கோட்டை மாவட்ட கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

ராமேசுவரம், பாம்பன், தனுஷ்கோடி, மண்டபம் உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் உள்பட மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

கனமழை வாய்ப்பு: புதன்கிழமை மழை வாய்ப்பு குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது: குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அநேக இடங்களில் மழை பெய்யக்கூடும். தென் தமிழகம் மற்றும் வட கடலோர மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம். குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக அடுத்த சில நாள்களுக்கு மழை நீடிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்)

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை - 70, வேதாரண்யம், பாம்பன் - 40, ராமேசுவரம், திருவாரூர் மாவட்டம் அதிராமப்பட்டினம், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி - 20, தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர், நாகப்பட்டினம் - 10.

### இதுதான் தருணம்!

தமிழகத்தின் மேட்டூர் அணை 1934-ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அதுதொடங்கி, கடந்த எண்பது ஆண்டுகளில் காவிரி டெல்டா விவசாயிகள் மேட்டூர் அணையால் பெற்றுவரும் நன்மைகளைச் சொல்லி மாளாது. தற்போது காவிரி டெல்டா சாகுபடி முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் முதல் முறையாக இந்த அணையைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும்.

மேட்டூர் அணையோடு தொடர்புடைய நீர்வழிகள், பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றைச் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கவும் தூர்வாரவும் செப்பனிடவும் தேவையான நடவடிக்கைகளைப் பொதுப்பணித் துறை மேற்கொள்கிறது. ஆனால் அணைக்கு உள்ளே தூர்வாரும் பணி இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

120 அடி உயரம் வரை நீர் தேக்கி வைக்கக்கூடிய இந்த அணையின் முழுக் கொள்ளளவு 93.5 டிஎம்சி. ஆனால் அதே அளவு தண்ணீரைத்தான் இப்போது தேக்க முடிகிறதா என்றால்,

நிச்சயமாக இல்லை. கடந்த எண்பது ஆண்டுகளாக வண்டல் மண் சேர்ந்து சேர்ந்து அணையின் கொள்ளவு குறைந்தபட்சம் 10 டிஎம்சி குறைந்திருக்கிறது என்பதே பொறியாளர்களின் கணிப்பு.

2004-ஆம் ஆண்டு மேட்டூர் அணையில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. எந்த அளவுக்கு வண்டல் மண்படிவு ஏற்பட்டுள்ளது, இதை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்துப் பொறியாளர்கள் குழு ஆய்வு செய்தது. ஆனால் அதன் பிறகு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அப்போதைய கணக்கின்படி அணை பரப்பில் 24 சதவீதம் வண்டல்மண்படிவு இருப்பதாகக் கண்டறிந்தனர்.

வெள்ளமாகப் புரண்டு வரும் காவிரி நீர் தன்னோடு எடுத்துவரும் வண்டல் மண்ணின் பெரும்பகுதி, தண்ணீரிலேயே கரைந்து, கலங்கிய நீராக வெளியேறிக்கொண்டே இருக்கும். அதுவும் அணையிலிருந்து தண்ணீர் அதிகமாக வெளியேற்றப்படும் நாள்களில்தான் இவ்வாறாக நிகழும். அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் அளவு குறையும்போது, நீரில் கரைந்து மிதக்கும் வண்டல் மண் மெல்ல அணையின் அடியில் சென்று தங்கும். இவ்வாறாக, தண்ணீரில் கரைந்து வெளியேறிய வண்டல் போக, அடியில் தங்கிய வண்டல் மண், அணைப்பரப்பில் 24 சதவீதம் இருக்கிறது என்பதே ஆய்வு தரும் புள்ளிவிவரம்.

இப்போது மீண்டும் ஒரு ஆய்வு செய்து, வண்டல் மண்படிவை அகற்ற வேண்டிய அவசர அவசியம் நேரிட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் எந்த அளவுக்கு வண்டல் மண்படிவு கூடியுள்ளது என்பதை எளிதில் கண்டறிந்துவிடலாம்.

சுமார் 1,700 மீட்டர் நீளமும், 59.25 சதுர மைல் பரப்பும் கொண்ட மேட்டூர் அணையில் ஆய்வு நடத்துவதே பெரும்பாடு. வண்டல் மண்படிவை அகற்றுவது அதனினும் பெரும்பாடு. இருப்பினும், இன்றைய நவீனத் தொழில்நுட்ப உதவியுடன் இந்த ஆய்வை ஓரிரு நாள்களில் இப்போது செய்துவிட முடியும். வண்டல் மண்படிவைச் சில வாரங்களில் அகற்றிவிடவும் முடியும்.

கோடை வந்துவிட்டது. இனி மழை வரப்போவதில்லை. காவிரி டெல்டா பகுதியில் அடுத்த நெல் சாகுபடி ஜூன் மாதத்தில்தான் தொடங்கும். இடைப்பட்ட இந்த காலகட்டத்தில், மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தைத் தூர்வாரும் பணியை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். இதனால் நாம் நீரைச் சேமித்துவைக்கும் அளவு குறையாதபடி பார்த்துக்கொள்ள முடியும். தற்போது வண்டல் மண்படிவினால் குறைவதாகக் கணக்கிடப்படும் 10 டிஎம்சி தண்ணீர் என்பது, நாம் இழந்துகொண்டிருக்கும் மிகப்பெரும் சொத்து என்பதையும் இந்த வேளையில் கருத்தில் கொள்ள வேண்டும்.

அணை புனரமைப்பு மற்றும் பலப்படுத்துதல் பணிக்காக மத்திய அரசும் உலக வங்கியும் நிதியைத் தாராளமாக வழங்குகின்றன. அதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். அணையைத் தூர் வாருவதற்கு நிதி ஒரு தடையாக இருக்காது என்பது நிச்சயம்.

மேலும், தூர்வாரப்படும் வண்டல் மண் விவசாய நிலத்தின் மண்வளத்தை மேம்படுத்த மிகவும் உகந்தது. இந்த வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல விவசாயிகளிடையே போட்டா போட்டி நடைபெறும். வண்டல் மண்ணை எடுத்துச் செல்வதற்கு விவசாயிகளிடம் பணம் வசூலிக்கப்படுவதில்லை. ஆனாலும், இதனை "வல்லமை படைத்தவர்கள்' சிலர் மொத்தத்தையும் தாங்களே எடுத்துச்சென்று விற்பனை செய்யும் வாய்ப்புகள் அதிகம். ஆகவே இந்த வண்டல் மண், விவசாயிகளுக்கு மட்டுமே கிடைக்கும்படியான சான்றளிப்புகள் முறைப்படுத்த வேண்டும். இத்தகைய சான்றுகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் வழங்குவதே வழக்கம்.

இந்த வண்டல் மண்படிவை அகற்றும் பணியை எந்த இடத்தில் தொடங்கி, எங்கு முடிப்பது, வாகனங்களை அணைக்குள் இறக்குவதை எந்தப் பக்கமாகச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் பொறியாளர்கள் திட்டம்போட்டுக் கொடுத்தால், இதற்கான நிதியுதவியையும் உடனே அளித்தால், அணை தூர்வாரும் பணியை வேகமாக முடித்துவிடலாம்.

மேட்டூர் அணை மட்டுமின்றி, பவானி சாகர், அமராவதி அணை ஆகியவற்றிலும்கூட எந்த அளவுக்கு வண்டல்மண் படிவு உள்ளது என்பதை ஆய்வு செய்யவும், அவற்றை அகற்றவும் நடவடிக்கை எடுக்கலாம். காவிரி சார்ந்த கால்வாய்களோடு தொடர்புடைய குட்டைகள், குளங்கள் இன்று ஆக்கிரமிப்பால் மறைந்துவிட்டன. ஆனாலும், வருவாய்த்துறையின் 1924 புலச்சுவடியை (லேண்ட் மேப்) ஒப்பிட்டுப்பார்த்து, இவற்றை மீட்கவும், செப்பனிடவும், விவசாயத்துக்கான நீரைச் சேகரிக்கவும் முடியும்.

கடந்த நான்கு நாள்களில் மேட்டூர் அணையின் நீர்உயரம் 4.5 அடிக்கும் அதிகமாகக் குறைந்துவிட்டது. தற்போது அணையின் நீர்உயரம் 29.4 கனஅடி மட்டுமே. தோராயமாக 7 டிஎம்சி தண்ணீர்தான் அணையில் உள்ளது. இதுவே நல்ல தருணம். இந்த வாய்ப்பை அரசு நழுவ விடக் கூடாது!

நமது நதிநீர் உரிமைக்காக நாம் போராடுவது ஒருபுறம் இருந்தாலும், அணைகளையும், நீர் நிலைகளையும் பாதுகாக்கும் பணியிலும் கவனமாக இருப்பதுதான் புத்திசாலித்தனம்!

இன்றைய வேளாண் செய்திகள்

6.03.2013 A.M

### பசும்புல் தீவனம் மாற்றாக "ஊறுகாய் புல்'சர்க்கரை ஆலையில் விவசாயிக்கு முகாம்

தஞ்சாவூர்: குருங்குளம் சர்க்கரை ஆலையில், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கால்நடைகளுக்கு ஊட்டமேற்றிய ஊறுகாய் புல் தீவனம் தயாரிக்கும் செயல்விளக்க முகாம் நடந்தது.தஞ்சை அருகேயுள்ள குருங்குளம் சர்க்கரை ஆலையில், கரும்பு சோகையை சிறுசிறு துண்டுகளாக நசுக்கி, ஊட்டமேற்றிய ஊறுகாய் புல் தயாரித்து, பதனிட்டு கால்நடைகளுக்கு தீவனமாக வழங்குவது குறித்த, விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்து, கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது:தற்போது நிலவி வரும் வறட்சியான சூழலில், கரும்பு சோகையை கொண்டு ஊறுகாய் புல் தயாரித்து, கால்நடைகளுக்கு வழங்கலாம்.இத்தகைய உத்திமுறைகளை விழிப்புணர்வு முகாமில், விவசாயிகளுக்கு அதிகாரிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.இதனைத்தொடர்ந்து, ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி பேராசிரியர் ராமச்சந்திரன் பேசுகையில், ""கரும்பு சோகையிலிருந்து தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் ஊறுகாய் புல், கால்நடைகளுக்கு சிறந்த சரிவிகித உணவாக விளங்குகிறது. இதனை, பல ஆண்டுகள் வரை, வைத்திருந்து, கால்நடைகளுக்கு ஊறுகாய் புல்லை தீவனமாக அளித்து, வறட்சி சூழ்நிலையையும், தீவன பற்றாக்குறையையும் சமாளிக்க முடியும்," என்றார்.நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், வேளாண்மைத்துறை துணை இயக்குனர் முகமது யாகியா உள்பட பலர் பங்கேற்றனர்.

### வறட்சியால் மலை மாடுகளுக்கு தீவனம் தட்டுப்பாடு

தேவாரம் : தேனி மாவட்டத்தில் நிலவும் வறட்சியால், மலை மாடுகளுக்கு தீவன தட்டுபாடு ஏற்பட்டுள்ளதால்,மாடு வளர்ப்போர் சோளம், மக்காசோள கழிவுகளை தேடி அலையும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

தவாரம், போடி, கூடலூர், கடமலைகுண்டு உள்ளிட்ட பகுதிகளில் பல்லாயிரம் மலை மாடுகள் வளர்க்கப்படுகின்றன. வனப்பகுதியில் கிடை அமைத்து மேய்ச்சலுக்கு விடுவதால், மலை மாடுகள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றில் இருந்து ஜல்லிக்கட்டு, மாட்டு வண்டி எல்லை பந்தயத்தில்

கலந்து கொள்ளும் மாடுகள், தரம் பிரிக்கப்பட்டு, வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் இவை வளர்க்கப்படுகின்றன.

தற்போது,மாவட்டத்தில் நிலவும் வறட்சியால், வனப்பகுதி காய்ந்து கிடக்கிறது. மழைப் பொழிவு குறைந்ததால் தரிசு நிலங்களும் பசுமையின்றி உள்ளன. மலை மாடுகளுக்கு தேவையான தீவனம் கிடைக்காமல்,மாடு வளர்ப்போர் அவதிப்படுகின்றனர். இறவை பாசன நிலங்களில் விளைந்த சோளம், மக்காசோளப்பயிர்களில் இருந்து மணிகளை பிரிக்கும் இடங்களை தேடிச் செல்கின்றனர்.

சோளத்திலிருந்து மணிகள் பிரித்த பின் கிடைக்கும் கழிவுகளை மேய்ச்சலுக்கு பயன் படுத்துகின்றனர். மாடு வளர்ப்போர் கூறியதாவது:

கடந்த 20 ஆண்டுகளில், இது போன்ற வறட்சியை பார்த்ததில்லை. வனப்பகுதி காய்ந்து கிடப்பதால் மாடுகளை அங்கு மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல முடியவில்லை. மானாவாரி நிலங்களில் பெரும்பாலான விவசாயிகள் பணிகள் மேற்கொள்ளவில்லை. தரிசு நிலங்களில் புல் முளைக்காததால், சோளம், மக்காசோள கழிவுகளை உணவாக கொடுக்கும் நிலையுள்ளது. இவற்றில் மாடுகளுக்கு தேவையான ஊட்டச்சத்து எதுவும் இல்லை. வேறு வழியில்லாமல் இவற்றை உணவாக கொடுக்கிறோம், என்றனர்.

## கோடை மழையால் நடவு செய்த பயிர்கள் கால்நடைகளின் குடிநீர் ஆதாரத்திற்கு சிக்கல்

சிவகங்கை:சிவகங்கையில் தற்போது பெய்து வரும் கோடை மழையால், 3,700 எக்டேரில் நடவு செய்த பயிர்கள் தப்பியது. இருப்பினும்,போதிய மழையின்றி நீர்ஆதாரங்களில் கால்நடைகளுக்கு குடிநீர் இன்றி சிக்கல் நிலவுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக மழையின்றி,கோடை வெயிலை எப்படி சமாளிப்பதென தெரியாமல், உள்ளாட்சி நிர்வாகம் திணறி
வந்தது.

குறிப்பாக, கிராமப்புற மக்களின் குடிநீர் ஆதாரமான ஊரணி, குளங்கள் நீரின்றி வறண்டு கிடப்பதால், கோடையில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை எப்படி சமாளிப்பதென தெரியாமல் திணறி வருகின்றனர்.

இந்நிலையில், மாவட்டத்தில் பரவலாக கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. ஊரணி, குளங்களை நிரப்பும் வகையில் மழை இல்லாதபோதும், தற்போது பெய்துள்ள மழையால், மாவட்ட அளவில், கரும்பு 3 ஆயிரம் எக்டேர், பருத்தி 200, மிளகாய் 300, காய்கறிகள் 200

எக்டேரில் விவசாயிகள் நடவு செய்துள்ளனர். கோடை வெயிலின் தாக்கத்தால், பயிர்களை காப்பாற்ற முடியுமா என்ற அச்சத்தில் இருந்த விவசாயிகளுக்கு, கோடை மழை கைகொடுத்துள்ளது.

அதே நேரம், மாவட்ட அளவில் வறண்டுள்ள கண்மாய்,குளங்களில் நீர் தேங்கும் அளவிற்கு மழை பெய்யாததால், வறட்சியான நேரத்தில், கால்நடைகள் குடிநீரின்றி தவிக்கின்றன. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி, கால்நடைகளுக்கு குடிநீர் சிக்கலின்றி கிடைக்கும்.

சிவகங்கை விவசாய அலுவலர் நடராஜன் கூறுகையில்,""கோடை மழை தொடர்ந்து அடித்தால், கண்மாய், குளங்களில் நீர் தேங்கி, கால்நடைகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

தற்போது நடவு செய்துள்ள பயிறு, மிளகாய், பருத்தி, கரும்பு, பயறு உள்ளிட்ட பயிர்கள் மழையால் தப்பியது. தொடர்ந்து நெல் நடவு செய்ய, போதிய மழை பெய்தால், விவசாயிகள் விவசாய பணி

களில் ஆர்வமாக ஈடுபடுவர்,''

என்றார்.

காரைக்குடி: கடந்த சில நாட்களாக கடும்பனி மற்றும் வெயிலால் அவதிப்பட்டு கொண்டிருந்த நிலையில், நேற்று காலை முதல் மாலை வரை, காரைக்குடி, புதுவயல், சாக்கோட்டை, பள்ளத்தூர், அமராவதிபுதூர் பகுதிகளில், தொடர்ந்து மழை பெய்தது. பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்கள், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

## வங்கிகள் மூலம் ரூ.3,061 கோடி முன்னுரிமை கடன் வழங்க இலக்கு நபார்டு வங்கி பொதுமேலாளர் தகவல்

சிவகங்கை:""சிவகங்கை மாவட்டத்தில் வங்கிகள் மூலம் 2013-14ம் ஆண்டிற்கு முன்னுரிமை கடனாக ரூ.3 ஆயிரம் கோடியே 60 லட்சத்து 53 ஆயிரம் வழங்க, இலக்கு நிர்ணயித்துள்ளதாக,'' நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் பங்காரு கிரி தெரிவித்தார்.

நபார்டு வங்கி திட்ட மதிப்பீடு அறிக்கையை, வங்கி உதவி பொது மேலாளர் பங்காரு கிரி வெளியிட, சிவகங்கை கலெக்டர் ராஜாராமன் பெற்றார். ஐ.ஓ.பி.,சென்னை உதவி பொது மேலாளர் பிஸ்வநாத் பந்தோபாத்யாயா, காரைக்குடி மண்டல முதன்மை பொது மேலாளர் பாலசந்தர், முன்னோடி வங்கி மேலாளர் பெருமாள், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மாயத்தேவர் பங்கேற்றனர்.

உதவி பொது மேலாளர்(நபார்டு) பங்காரு கிரி பேசுகையில், 2013-14ம் நிதி ஆண்டில், சிவகங்கை

மாவட்டத்தில், விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்களுக்கும், விவசாயம் சாராத பிரிவுகளுக்கும் வங்கிகள் மூலம் முன்னுரிமை கடன்கள் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டிற்கு, ரூ.3 ஆயிரம் கோடியே 60 லட்சத்து 53 ஆயிரம் வரை கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். இதில், பயிர் கடன் ரூ.1,279 கோடி; விவசாயம் அதை சார்ந்த துணை தொழில்
களுக்கு நீண்ட காலக் கடன்களுக்கு ரூ.926 கோடி, விவசாயம் சாராத தொழில் கடன்களுக்கு ரூ. 334.26 கோடி, பிற முன்
னுரிமை கடன்கள் ரூ. 520.28 கோடி என, ஒட்டுமொத்தமாக ரூ.3 ஆயிரம் கோடியே 60 லட்சத்து 53 ஆயிரம் வழங்கப்படும், என்றார்.

## அணைகளில் குறைந்து வரும் நீர்மட்டம் தரிசாக கிடக்கும் விவசாய விளை நிலங்கள்

திருநெல்வேலி : நெல்லை மாவட்ட அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நெல்லை மாவட்ட பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் மூலம் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 86 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கடந்த ஆண்டில் கார் பருவம், பிசான பருவங்கள் ஏமாற்றம் அளித்த நிலையில் இந்த ஆண்டும் போதுமான தண்ணீர் இல்லாததால் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. எனினும், ஒரு சில இடங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகிறது. அணைகளில் போதுமான மழை இல்லாததால் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. பாபநாசத்தில் 42, சேர்வலாறில் 56, மணிமுத்தாறில் 80, குண்டாறில் 20 அடிக்கு குறைவாகவும் தண்ணீர் காணப்படுகிறது. இதே நிலை நீடித்தால் விரைவிலேயே அணைகளில் நீர்மட்டம் கணிசமாக குறையும் வாய்ப்பு ஏற்படும். மேலும் வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் கோடை காலம் என்பதால் கடுமையான குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படும். ஒருபுறம் விவசாய பணிகள் முற்றிலும் பாதித்து விவசாய விளை நிலங்கள் தரிசாக காணப்படும் நிலையில், குடிநீர் பிரச்னையும் தலை விரித்தாடினால் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுவர். இதற்கிடையில் நெல்லை மாவட்ட பகுதிகளில் நேற்று பல இடங்களில் சாரல் மழை பெய்தது. நேற்று காலை முதலே வானம் மப்பும், மந்தாரமுமாக மேக கூட்டங்களுடன் காணப்பட்டது. நெல்லை, பாளை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மதியம் ஆங்காங்கே சாரல் மழை பெய்தது. தொடர்ந்து மாலையிலும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. வருங்காலங்களில் குடிநீர் பிரச்னை அதிகமாகாமல் இருக்க வருண பகவான் அடிக்கடி கருணை காட்ட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

## விளைச்சலும் இல்லை... விலையும் இல்லை... எலுமிச்சை விவசாயிகள் கவலை

ஆழ்வார்குறிச்சி : கடையத்தில் எலுமிச்சை பழம் விளைச்சலும், விலையும் இல்லாததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். தற்போது கோடை காலம் முன்கூட்டிய துவங்கும் அளவிற்கு வெயில் கடுமையாக அடிக்க துவங்கியுள்ளது. இந்நேரத்தில் எலுமிச்சை பழம் விலை அதிரிகக்கும். எலுமிச்சை பழம் விளைச்சல் இல்லாததால் விலையும் இல்லை. முதல் தர பழம் ரூ. 2க்கும், 2ம் தரம் பழம் 1 ரூபாய்க்கும், சுமாரான பழம் 50 காசு முதல் விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சல் குறைந்து விட்ட நிலையில், விலையும் இல்லாததால் கடையம் பகுதி எலுமிச்சி விவசாயிகள் கடும் கவலையடைந்துள்ளனர்.

## தண்ணீர் பஞ்சத்தால் கடலை மகசூல் பாதிப்புஎண்ணெய் விலை விரைவில் உயர வாய்ப்பு

கோபிசெட்டிபாளையம்: பருவ மழையின்மை, நிலத்தடி நீர்மட்டம் குறைவால், ஆடிப்பட்டத்தில் விதைத்த நிலக்கடலை செடிகள் கருகி, மகசூல் பாதியாக குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில், 30 சதவீத நிலங்கள் ஆற்று பாசனத்தையும், ஏனைய நிலங்கள் நிலத்தடி நீர் மற்றும் பருவ மழையை நம்பியே விவசாயம் நடக்கிறது. ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையை நம்பி, ஈரோடு மாவட்டத்தில் ஆடிப்பட்ட மானாவாரி நிலங்களில், 40 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடியாகும். எண்ணெய் வித்து பயிர்களில் முக்கிய இடத்தை வகிக்கும் கடலை, கால் நடைகளுக்கு சிறந்த தீவனமாக மட்டுமின்றி, புண்ணாக்கு தயாரிக்கப்படுகிறது.சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் பகுதிகளில் கிணற்று நீரை நம்பி விவசாயம் செய்யப்படுகிறது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து விட்டது. போர்வெல் மற்றும் கிணற்று நீரை பயன்படுத்தி மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்து, நிலக்கடலை விதைப்பு செய்தனர். ஒரு ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்ய, 15 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.கோபி, சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குன்னத்தூர், குறிச்சி, தாளப்பதி, பூச்சநாயக்கன்பாளையம், நம்பியூர், திங்களூர், கோசனம், மந்திரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை அதிகம் சாகுபடியாகிறது. பருவமழையின்றி, வெப்பம் நீடிக்கிறது.மானாவாரியில் பயிரிட்டுள்ள நிலக்கடலை செடிகள் வாட துவங்கி உள்ளது. கடலையில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் துவரை, ஆமணக்கு, பாசிப்பயிர், நரிப்பயிர் ஆகியவையும் கடுமையாக பாதித்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.சிறுவலூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:மானாவாரியில் நிலக்கடலை சாகுபடி செய்ய ஏக்கருக்கு, 50 கிலோ விதை தேவைப்படுகிறது. ஒரு கிலோ விதை,

85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உழவு செலவு ஏக்கருக்கு, 3,500 ரூபாய், களைக்கொல்லி, மேலுரம், 4,500 ரூபாய், அறுவடை செலவு, 3,000 என மொத்தம், 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு, 1,000 முதல், 1,200 கிலோ நிலக்கடலை கிடைக்கும். மொத்த விற்பனையில், 138 கிலோ கொண்ட ஒரு மூட்டை, 4,500 முதல், 6,000 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்குகின்றனர்.ஊடுபயிராக பயிரிட்ட விளை பொருட்கள் மூலம், 5,000 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். நிலக்கடலை செடியை ஓராண்டு வரை வைத்திருந்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த முடியும்.கடந்தாண்டு, பருவமழை பொய்த்து நிலக்கடலை சாகுபடி பரப்பு, 20 முதல், 30 சதவீதம் வரை குறைந்தது. ஆடிப்பட்டத்தில் பயிரிட்ட நிலக்கடலை செடிகள் கருக துவங்குகிறது. கடந்த மாதம் பெய்த மழையால் மானாவாரி நிலங்கள் லேசாக புத்துயிர் பெற்றது. இருப்பினும் பருவமழை பொய்த்ததால் மகசூல் இழப்பு பாதியாக குறைய வாய்ப்புள்ளது. நிலக்கடலை மகசூல் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், எண்ணெய் விலை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது, என்றார்.

## வறட்சியால் கால்நடை தீவனம் கிடைப்பதில்...கரும்பு தோகையை பதப்படுத்தும் விவசாயிகள்

ஈரோடு: மழையின்றி வறட்சியால், தமிழகத்தில் கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலை கொடுத்தாலும் சோளத்தட்டுகள் கிடைக்காததால், கால்நடைகளை காப்பாற்றும் நோக்கில், கரும்பு தோகை (சோகை) வாங்கி போர் கட்டி வருகின்றனர்.தமிழகத்தில் கடந்த, 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், இன்று வரையிலும் முற்றிலுமாக மழை பொய்த்துப்போய், கடந்தாண்டு அடித்த கடும் வெயிலால், நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு போயின.ஆறு, வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படாததால், உணவு பொருட்கள் உற்பத்தி நான்கில் ஒரு பங்காக குறைந்தது. மானாவரி பயிர்களான சோளம், மக்காச்சோளம் போன்றவையும், மழையின்றி உற்பத்தி செய்யப்படவில்லை.நெல், மஞ்சள் பயிரிட்ட நிலங்களில் கரும்பு பயிரிட்டுள்ளனர். டெல்டாவில் சாகுபடியை தவிர்த்துள்ளனர்.சோளம், மக்காச்சோளம், பசுந்தாள் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், தீவனம் கிடைக்காமல் கால்நடைகளை கிடைக்கும் விலைக்கு விற்று வருகின்றனர்.ஈரோடு மாவட்டத்தில், சாவடிபாளையம், கணபதிபாளையம், சோலார் பகுதி விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மாடுகளை காப்பாற்ற, கரும்பு தோகையை விலை கொடுத்து வாங்கி போரடித்து வருகின்றனர்.இதுபற்றி மன்னாதம்பாளையம் விவசாயி தாயுமானவன் கூறியதாவது:ஓராண்டாக மழையின்றி, சோளத்தட்டுகள் கிடைப்பதில்லை.

வாய்க்கால் பாசனத்தில் சோளத்தை விளைவித்தவர்கள், ஏக்கர் ஒன்றுக்கு, 45 ஆயிரம் ரூபாய் கேட்கின்றனர். வெட்டுக்கூலி, வண்டி வாடகை, போர் அடிக்க என, 50 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.நான்கு கறவைகளுக்கு ஆறு மாத உணவுக்கு, 50 ஆயிரம் ரூபாய் செலவிட்டால், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபம் கிடைக்காது.கால்நடைகள் தீவனமின்றி இறப்பதை தடுக்க, கரும்பு தோகைகளை வாங்கி, சோளத்தட்டுக்கு பதில் தீவனமாக கால்நடைக்கு வழங்குகிறோம். ஒரு ஏக்கர் கரும்பு சோவை, கட்டுக்கூலி, வண்டி வாடகை, போர் அடிக்கும்போது, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.தோகையை போர் போடும்போது, உப்பு தெளித்து, அடுக்கி கட்டிவிட்டால் உப்புசம் காரணமாக, தெளிக்கப்பட்ட உப்பு தோகைக்குள் சேர்ந்துவிடும்.மாடுகளுக்கு தீவனமாக கொடுக்கும்போது, வழக்கமாக நாளொன்றுக்கு இரண்டு முறை கால்நடைக்கு தண்ணீர் காட்டுவோம்.தோகையை தீவனமாக கொடுக்கும்போது, ஐந்து முறை தண்ணீர் காட்ட வேண்டும். மாடுகளின் பால் வழங்கும் அளவும் குறைந்து விடும்.கால்நடைகள் இறப்பதை தடுக்க வேறு வழியில்லை. இதுவும் தீர்ந்து போனால், அடுத்து கால்நடைக்கு தீவனம் என்பதே கிடைக்காது, என்றார்.

## காற்கறி பயிர்கள் வாட்டம்: விவசாயிகள் கவலை

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் பயிரிட்டுள்ள மலைக்காய்கறிகள் வறட்சி காரணமாக வாட்டம் கண்டு வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு அடுத்தப்படியாக, நீர் ஆதாரமுள்ள பகுதிகளில் மலை காய்கறிகளான, காரட், முட்டைகோஸ், பீன்ஸ் மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில், நடப்பாண்டு, பருவமழைப் பொய்த்ததால், பெரும்பாலான பகுதிகளில் தேயிலை செடிகள் கருகி வருகிறது. நீர் ஆதாரமுள்ள ஓடைகளும், குளங்களும் படிப்படியாக வற்றிவருவதால், காய்கறி பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல், விவசாயிகள் திணறி வருகின்றனர். இன்னும், ஓரிரு வாரங்களில் அறுவடைக்கு தயாராக உள்ள காரட், முட்டைகோஸ், பீன்ஸ் போன்ற காய்கறி பயிர்கள் நிலத்திலேயே பாதிப்படைந்து வருகின்றன.கோத்தகிரி வட்டாரத்தில், குறிப்பாக, நெடுகுளா, மிளிதேன், கேர்கம்பை, சுள்ளிக்கூடு, பட்டகொரை மற்றும் கூக்கல்தொரை உள்ளிட்ட பகுதிகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.எனவே, மழை

இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்ட பகுதிகளை, அதிகாரிகள் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விவசாய ஆர்வலர் குழுவுக்கு பயிற்சி

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகேயுள்ள ஆண்டிமடம் வேளாண்மை விரிவாக்க மையத்தில், விவசாய ஆர்வலர் குழுவுக்கு பயிற்சி நடந்தது. பயிற்சியை ஆண்டிமடம் சேர்மன் சுகுணா துவக்கி வைத்தார். "அட்மா' திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து, வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி விளக்கினார். ஆர்வலர் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. குழுவினர் செயல்படும் விதம் பதிவேடுகள் பராமரிப்பு நடைமுறைகள் பற்றி, துணை வேளாண்மை அலுவலர் அப்பாவு, "அட்மா' திட்ட இனவரியான திட்டங்களை பற்றி, திட்ட மேலாளர் விஜயகுமார் பேசினார். பயிற்சியில் "அட்மா' திட்ட உறுப்பினர்கள் கோவிந்தசாமி, பவுல்ராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.பயிற்சியில் தேவனூர், கண்டியங்கொல்லை, குடிக்காடு, மருதூர், குளத்தூர் ஆகிய பஞ்சாயத்துகளில் இருந்து, 15 விவசாயிகள் வீதம், 75 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

## மலைகிராமத்தில் பேரீட்சை மரம் வளர்க்கும்... மாற்று சாகுபடி முறைக்கு தாவும் விவசாயிகள்

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் அருகே கல்வராயன்மலைப்பகுதியில் நிலவும் வறட்சி காரணமாக மாற்று பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். புது முயற்சியாக பேரிட்சை மரக்கன்று வளர்ப்பில் இறங்கியுள்ளனர்.கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலையொட்டிய கிராமங்களில் வாழை, நெல், கரும்பு மற்றும் கீரை வகைகள், காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகிறது. சமீப காலமாக பருவமழை பொய்த்து வருவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாய சாகுபடி பாதிக்கப்பட்டு வருகிறது.கல்வராயன் மலைப்பகுதி ஆறுகளான பொட்டியம், கல்படை, மாயம்பாடி ஆறுகளின் வழியாக கோமுகி அணைக்கு சென்று தேங்கும் பாசன நீரும் முழுமையாக குறைந்துவிட்டது. அத்துடன் வறட்சி காரணமாகவும், ஆறுகளில் மணல் படுகை இரவு பகலாக கொள்ளையடிக்கப்படுவதால் நிலத்தடி நீரும் நூறு அடிக்கும் கீழ் குறைந்துவிட்டது.அடிக்கடி ஏற்படும் மின் பற்றாக்குறை, டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பல காரணங்களால் பாதிக்கப்பட்டுவரும் விவசாயிகள், வறண்ட நிலப்பகுதிகளில் பயிரிடக்கூடிய விவசாய முறைகளை பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.அந்த வகையில் கல்வராயன்மலையையொட்டி கோட்டக்கரை பகுதியில், பாலைவன பயிரான "பெர்ரி" ரக பேரீட்சை மரம் வளர்ப்பில் இறங்கியுள்ளனர். அபுதாபி நாட்டில் வளர்க்கப்படும் இந்த வகை பேரிட்சை, குஜராத் மாநிலத்தில் நடப்பட்டது. அங்கிருந்து

தமிழகத்தில் கோவை மாவட்ட விவசாயிகள் இப்பகுதியில் அறிமுகம் செய்தனர். கச்சிராயபாளையம் அருகே கோட்டக்கரையை சேர்ந்த கைலாசம் என்ற விவசாயி, தனது மூன்றரை ஏக்கர் நிலத்தில் 300 பேரீட்சை மரக்கன்றுகளை நட்டு வளர்த்து வருகிறார். அரையடி உயரம் உள்ள ஒரு மரக்கன்று 3,500 ரூபாய்க்கு வாங்கி வந்து நட்டுள்ளார். சொட்டு நீர்பாசனத்தில் வளரும் இதன் பராமரிப்பு செலவில் 60 சதவீதம் மான்யமாக அரசு வழங்கியுள்ளது.ஏக்கருக்கு எண்பது முதல் எண்பத்தைந்து வரையிலான செடிகளை வளர்க்கிறார். இரண்டரை ஆண்டுகளில் பேரீட்சையானது மரமாக வளர்ந்து 50 ஆண்டுகள் பலன் தரும் என கூறப்படுகிறது. ஓராண்டு வரை வறட்சியை தாங்கும் என்பதாலும் மற்ற விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

## விவசாயசங்க மாநாடு

ஆத்தூர்: ஆத்தூர் ராணிப்பேட்டையில், தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில், மாநாடு நடந்தது.மாநாட்டில், சங்க மாநில பொது செயலாளர் துரைமாணிக்கம் பேசியதாவது:தேசிய அளவில், 40 ஆண்டுக்கு முன், 55 சதவீதமாக இருந்த விவசாயம் தற்போது, 15 சதவீதமாக குறைந்துள்ளது. மற்ற தொழில்களை விட, விவசாயத்துக்கு கூடுதல் நிதி உதவி செய்து, பாதுகாக்க வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களில் மீண்டும் கணக்கெடுப்பு செய்து, நிவாரணம் வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

## மரவள்ளி கிழங்கு நாற்று முறையில் நடவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், நோய் தாக்குதல் இல்லாமல் தரமான செடிகளை நட குழிதட்டு மரவள்ளி கிழங்கு நாற்றுகளை விவசாயிகள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில், மரவள்ளி கிழங்கும் ஒன்று. மாவட்டத்தில், மானாவரியாகவும், இறவை சாகுபடியிலும், 18 ஆயிரத்து, 978 ஹெக்டேர் பரப்பளவில், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.மானாவரியில் சாகுபடி செய்யும் போது, விவசாயிகள் பாத்திகளில் மரவள்ளி கிழங்கு குச்சிகளை நேரடியாக நடவு செய்து வந்தனர். இறவை முறையில் நடவு செய்ய, நாற்றங்கால் அமைத்து நடுவு செய்து வந்தனர்.இது போன்று நடவு செய்யும் போது, அடிக்குச்சியில் இருந்து நடுக்குச்சி வரை நாற்றுகள் நட, விவசாயிகள் மரவள்ளி கிழங்கு குச்சிகளை பயன்படுத்தி வந்தனர். இதனால், வைரஸ் நோய் மற்றும் வேர் அறுந்து பாதிக்கப்பட்டு வந்தது.இதையடுத்து, தர்மபுரி மாவட்டம் உட்பட தமிழகத்தில் பெரும்பாலான மரவள்ளி கிழங்கு விவசாயிகள், கடந்த சில மாதங்களாக பசுமை குடில்களில் குழித்தட்டு நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் நாற்றுகளை பயன்படுத்தி வருகின்றனர்.தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர்(பொ) இமானுவேல் கூறியது:தர்மபுரி

மாவட்ட விவசாயிகள், புதுயுத்திகள் மற்றும் துல்லிய பண்ணை திட்டம் ஆகியவற்றில் பயிர்கள், காய்கறிகள், கரும்பு, வாழை, மரவள்ளி கிழங்கு உள்ளிட்டவைகளை சாகுபடி செய்து அதிகளவில் வருவாய் பெற்று வருகின்றனர்.மரவள்ளி சாகுபடியில், தற்போது பசுமைகுடில்களில் குழித்தட்டுகளில் வளர்க்கப்படும் மரவள்ளி கிழங்கு நாற்றுக்களை வாங்கி பயன்படுத்த தொடங்கியுள்ளனர். குழித்தட்டு முறையில் நுனி குச்சிகள் நடவு செய்யப்படுவதால், வைரஸ் நோய் தாக்குதல் பெரும் அளவு குறைகிறது.வேர்கள் எவ்வித பாதிப்பு இன்றி தரமான நாற்றுகளாக, குழித்தட்டில் இருந்து எடுத்து நேரடியாக நிலத்தில் நடவு செய்ய முடிகிறது. இதனால், செடிகள் நன்கு வளர்கிறது. நிலத்தில் ஒரு பகுதியில் கருகும் பயிர்களுக்கு உடனடியாக பசுமை குடிகளில் இருந்து தரமான நாற்றுகளை மீண்டும் பெற்று நடவு செய்ய முடியும்.இதனால், விவசாயிகளுக்கு அறுவடையின் போது மகசூல் பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. குழித்தட்டு நாற்றுக்கள் தரமானதவும், உரிய வளர்ச்சியுடன் கிடைப்பதால், விவசாயிகளுக்கு மகசூல் அதிகளவில் கிடைக்கிறது.இதனால், தர்மபுரி மாவட்டம் உள்பட தமிழகம் முழுவதும் விசாயிகள் பசுமை குடிகள்களில் குழித்தட்டுகளில் வளர்க்கும் மரவள்ளி கிழங்கு நாற்றுக்களை அதிகளவில் வாங்கி நடவு செய்து வருகின்றனர்.தர்மபுரி மாவட்டம் முழுவதும், 80க்கும் மேற்பட்டோர் பசுமை குடிகல்களில் குழித்தட்டு முறையில் மரவள்ளி கிழங்கு நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.பசுமை குடில் அமைத்து நாற்றங்கால் தயாரிக்கவும், பசுமை குடிகளின் கீழ் விவசாய பணிகள் மேற்கொள்ள தோட்டக்கலைத்துறை சார்பாக, 50 சதவீதம் ரூபாய் அரசு மானியமாக வழங்கி வருகிறது.மேலும், சிறுவிவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் சொட்டு நீர் பாசனத்திற்கு, 100 சதவீதம் மானியமும், அதற்கு மேல், 75 சதவீத மானியமும் வழங்கி வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## காபி ஏற்றுமதி 59,288 டன்னாக வளர்ச்சி



புதுடில்லி:நடப்பாண்டில் ஜனவரி மற்றும் பிப்ரவரி ஆகிய இரு மாதங்களில், நாட்டின் காபி ஏற்றுமதி, 5 சதவீதம் வளர்ச்சி கண்டு, 59,288 டன்னாக அதிகரித்துள்ளது என, காபி வாரியம் தெரிவித்துள்ளது.கடந்த ஆண்டின், இதே இரண்டு மாதங்களில், இதன் ஏற்றுமதி, 56,535 டன்னாக இருந்தது.சென்ற பிப்ரவரி மாதத்தில் மட்டும், இதன் ஏற்றுமதி, 37,731 டன்னாக

அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் இதே மாதத்தில், காபி ஏற்றுமதி, 36,423 டன்னாக காணப்பட்டது.நடப்பு ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில், மதிப்பின் அடிப்படையிலான காபி ஏற்றுமதி, 891 கோடி ரூபாயாக உள்ளது.

இது, கடந்த ஆண்டின் இதே இரு மாதங்களில், 857 கோடி ரூபாயாக இருந்தது.அதேசமயம், ஏற்றுமதி செய்யப்படும், ஒரு டன் காபியின் விலை, 1,50,312 ரூபாயாக சற்று குறைந் து உள்ளது.நம்நாட்டிலிருந்து, இத்தாலி (14,054 டன்), ஜெர்மனி (5,985 டன்), மற்றும் ரஷ்ய குடியரசு நாடுகளுக்கு (5,136 டன்) அதிகளவில் காபி ஏற்றுமதி செய்யப்படுகிறது.
கடந்த இரண்டு மாதங்களில், அராபிகா வகை காபி ஏற்றுமதி, 12,959 டன்னி லிருந்து, 14,962 டன்னாக அதிகரித்துள்ளது. இதே போன்று மறு ஏற்றுமதி செய்யப்படும் காபி, 9,955 டன்னிலிருந்து, 12,037 டன்னாக உயர்ந்துள்ளது.

அளவின் அடிப்படையில், ரோபஸ்டா வகை காபி அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. என்றாலும், கடந்த இரண்டு மாதங்களில், இதன் ஏற்றுமதி, 28,351 டன்னிலிருந்து, 27,645 டன்னாக குறைந்துள்ளது.இன்ஸ்டண்ட் காபி ஏற்றுமதியும், 5,244 டன்னி லிருந்து, 4,613 டன்னாக சரிவடைந்துள்ளது.நடப்பு 2012-13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின் காபி உற்பத்தி, 3.16 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தை விட, 1,500 டன் அதிகம் என, காபி வாரியம் தெரிவித்துள்ளது.

### சர்க்கரை உற்பத்தி 1.87 கோடி டன்னாக குறைவு



புதுடில்லி: நடப்பாண்டு பிப்ரவரி வரையிலுமாக, நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 1.87 கோடி டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 1.88 கோடி டன்னாக சற்று அதிகரித்து காணப்பட்டது.மதிப்பீட்டு காலத்தில், மகாராஷ்டிராவின் சர்க்கரை உற்பத்தி, 65.30 லட்சம் டன்னாகவும், கர்நாடகாவில் இதன் உற்பத்தி, 30.20 லட்சம் டன்னாகவும் உள்ளது. இது

தவிர, உத்தரபிரதேசம் (50.30 லட்சம் டன்), ஆந்திரா (80.30) மற்றும் தமிழகம் (90.30 லட்சம் டன்) ஆகிய மாநிலங்களிலும், சர்க்கரை உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது.

இருப்பினும், சீரற்ற பருவ நிலையால், கரும்பு அதிகம் விளையும் மாநிலங்களான, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா உள்ளிட்ட சில மாநிலங்களிலிருந்து, இதன் வரத்து குறைந்துள்ளது. இதனால், நடப்பு பருவத்தில், மகாராஷ்டிராவில், 28 ஆலைகளும், கர்நாடகாவில், 22 ஆலைகளும் சர்க்கரை உற்பத்தியை நிறுத்தியுள்ளன.இந்நிலையில்,நடப்பு பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.43 கோடி டன்னாக இருக்கும் என,மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில், 2.60 கோடி டன்னாக இருந்தது என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பான "இஸ்மா' தெரிவித்துள்ளது.

## இறக்குமதி வரியால் சமையல்எண்ணெய் விலை உயரும்



புதுடில்லி:கச்சா சமையல் எண்ணெய் மீதான, இறக்குமதி வரி உயர்வால், அதன் விலை, கிலோவுக்கு, 1.11 ரூபாய் உயரும்.சென்ற ஜன., 23ம் தேதி, கச்சா சமையல் எண்ணெய் மீதான இறக்கு மதி வரி, பூஜ்ஜியத்தில் இருந்து, 2.5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதே சமயம், சுத்திகரிக்கப் பட்ட சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரி, 7.5 சதவீதமாக உள்ளது.வரி உயர்வால், சமையல் எண்ணெய் விலை, கிலோ வுக்கு, 1.11 ரூபாய் உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மீண்டும் கச்சா சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரியை உயர்த்தும் திட்டமில்லை என, வேளாண் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர் பார்லிமென்டில் தெரிவித்தார்.

**விவசாய மலர்**

## மதுரையில் தொடர்ந்து கிணற்றுப்பாசனத்தில் நெல் சாகுபடி

மதுரையில் பல இடங்களில் மழை பெய்துள்ளதால் விவசாயிகள் சந்தோஷமாக நெல் சாகுபடி செய்துவருகிறார்கள். மதுரையில் வண்டியூர் கிராமத்தில் முற்போக்கு விவசாயி எம்.ஏ.விஜய

நடராஜனின் சாகுபடி நிலத்திற்கு அருகில் கண்மாய் இருப்பதால் அவரது கிணற்றில் 24 மணி நேரமும் தண்ணீர் கிடைக்கிறது. அதனால் அவர் உற்சாக மாகவும் சந்தோஷமாகவும் நெல் சாகுபடிசெய்துவருகிறார். அவர் ஏடீடி45, ஜே-13 நெல்லினை 15 நாட்களுக்கு முன் அறுவடை செய்துள்ளார். ஏடீடி45 ஒரு ஏக்கரில் 36 மூடை மகசூலும் ஜே13 ஒரு ஏக்கரில் 34 மூடை மகசூலும் எடுத்துள்ளார். ஒரு ஏக்கரில் ஏடீடி 45ல் ரூ.5000, ஒரு ஏக்கர் ஜே13ல் ரூ.5000 லாபம் கிடைத்துள்ளது. ரூ.500 விற்ற வைக்கோலில் இப்போது பத்து மடங்கு அதிகமாக லாபம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.
தமிழ்நாடு வேளாண்மை இலாகா அதிகாரிகள் விஜய நடராஜனை சந்தித்து நேர்காணல் எடுத்துச் சென்றுள்ளனர். விவசாயி அதிகாரிகளிடம் தான் கை நடவின் மூலம் செய்வதாகவும், இயந்திர நடவை பயன்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளார். நெல் பயிரில் பூச்சித்தொல்லை இல்லை என்றும் கூறினார். அவர்கள் விவசாயியை அடுத்தமுறை ஒற்றை நாற்றுமுறை நடவினை கடைபிடிக்கச் சொல்லி உள்ளனர். ஒற்றை நாற்று நடவில் தூர்கள் அதிகம் கிடைக்கும். சாகுபடி செலவு குறைவு. மகசூல் அதிகம். நீர்ப்பாசனத் தேவை குறைவு. குறைவான வேலை ஆட்கள் போதும்.
விவசாயி ரசாயன உரமே உபயோகிக்கவில்லை. பத்து வண்டி மாட்டுச்சாணம் தனது நிலத்திற்கு உபயோகித்துள் ளார். தற்போது கால்நடைத் தீவனம் சரியாக கிடைக்காததால் பசுக்களை ஈரோடு மாட்டுச் சந்தையில் விற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த அவல நிலைமையை விவசாயிகள் போக்க வேண்டும்.

கிணற்றுப் பாசனத்தில் நெல் விவசாயம் செய்யும் விவசாயிகள் ஜே13 விதை நெல்லை தேர்ந்தெடுத்து தொடர்ந்து சாகுபடி செய்யலாம். ஜே13 விதைநெல் கருப்பாயூரணியைச் சேர்ந்த தர்மராஜனிடம் கிடைக்கும். 93624 44440.
தமிழ்நாடு விவசாய இலாகா அதிகாரிகள் விஜய நடராஜனை சந்தித்து நேர்காணல் எடுத்துச் சென்றுள்ளனர். அதிகாரிகள் விவசாயியை அடுத்தமுறை ஒற்றை நாற்று முறை நடவினை கடைபிடிக்கச் சொல்லி உள்ளார்கள். அதிக மகசூல் கிட்டும். நீர்ப்பாசனத்தேவை குறைவு. குறைவான வேலை ஆட்கள் போதும். பூச்சி தொல்லை இல்லை. விஜய நடராஜன் நல்ல மகசூல் எடுத்து லாபம் எடுத்திருந்த போதிலும் விவசாய இலாகா சிபாரிசு ஏற்றபடி செய்திருந்தால் அதிக லாபம் எடுத்திருக்கலாம். விவசாயிகள் தங்கள் வசம் இருந்த வைக்கோலை பயன்படுத்தாதால் மாடுகளை சந்தையில் விற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் தெரிந்து கொள்வது யாதெனில் சாகுபடியை, பல விஷயங் களை கருத்தில் கொண்டு திட்டமிட்டு செய்ய வேண்டும். விவசாயிகள் தயவுசெய்து விவசாய இலாகா சிபாரிசுக்கு ஏற்று செய்ய வேண்டும். திட்டமிடுவது யாதெனில் கடுமையான உழைப்பு, விஞ்ஞான தொழில்

நுட்பங்களை அனுசரிப்பது, செயல் ஆற்றல் திறன் இவைகளோடு விவசாய இலாகா கூறும் வழிமுறைகளையும் கையாள வேண்டும். இவ்வாறு செய்யாமல் வைக்கோலை வைத்திருந்தும் மாடுகளை சந்தையில் விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### துவரை சாகுபடியில் நாற்று நடவு - சின்னச்சின்ன செய்திகள்

தென்னை நார்க்கழிவு நிரப்பப்பட்ட குழித்தட்டுகளில் துவரையை விதைத்து சூரிய வெளிச்சம் கிடைக்கும் வகையில் நிழலில் வைத்து பராமரிக்க வேண்டும். தினமும் பூவாளிகொண்டு தண்ணீர் தெளித்துவந்தால் நாற்று முளைக்கத் தொடங்கும். குழித் தட்டுகளுக்குப் பதிலாக பிளாஸ்டிக் ஷீட்களிலும், தென்னை நார்க் கழிவைக்கொட்டி, நாற்று உற்பத்தி செய்யலாம். குழித்தட்டு நாற்றுக்களை 15 நாட்களில் நடவு செய்துவிட வேண்டும். பிளாஸ்டிக் ஷீட்டில் வளர்ந்த நாற்றுக்களை 25 நாட்கள் வரை வைத்திருந்து நடலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு கிலோ விதை போதுமானது. வழக்கமான விதைப்பு முறையில் ஏக்கருக்கு 3 கிலோ முதல் 5 கிலோ வரை தேவைப்படும்.

மானாவாரி விவசாயிகள் நாற்றங்கால் உற்பத்தியை ஆகஸ்ட் மாதம் தொடங்கலாம். ஆகஸ்ட் மாதம் 2ம் வாரம் விதை போட்டால் செப்டம்பர் முதல் வாரம் நடவுப் பணியைத் தொடங்கலாம். அப்போது மழைக்காலம் என்பதால் நிலத்தில் உள்ள ஈரத்திலேயே நடவு செய்துவிடலாம். நாற்று உற்பத்தி தொடங்கும்போதே வயல் தயாரிப்பு பணிகளை தொடங்கிவிட வேண்டும். தொழு உரம் இட்டு நிலத்தை இரண்டு உழவு செய்ய வேண்டும். பிறகு 5 கொக்கிகள் உள்ள கலப்பையில் நடுவில் உள்ள 3 கொக்கிகளையும் கழற்றிவிட்டு ஓட்டினால் 5 அடி இடைவெளியில் பார் மாதிரியான கரைகள் உருவாகிவிடும். பாரின் ஒரு பக்கத்தில் 3 அடி இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக நடவு செய்ய வேண்டும். இப்படி பாரின் ஒரு ஓரத்தில் மட்டும் நடவு செய்வதால் பள்ளத்தில் தேங்கும் மழைநீரே நாற்று வளர போதுமானதாக இருக்கும்.

நடவு செய்த 25ம் நாள் களை எடுத்து மண் அணைக்க வேண்டும். அப்போது செடியின் நுனியைக் கிள்ளிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் அதிகக் கிளைகள் உருவாகும். இது தவிர வேறு பராமரிப்பு தேவைப்படாது. துவரையில் எந்நோயும் தாக்குவதில்லை. சில நேரங்களில் பூச்சி தாக்குதல் இருக்கலாம். 250 மிலி என்.பி. வைரஸ் கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலமாக தெளித்து உயிரியல் முறையிலேயே பூச்சிகளைக் கட்டுப்படுத்திவிடலாம்.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக மழை கிடைக்கும். அதைக்கொண்டே செடிகள் செழிப்பாக வளர்ந்துவிடும். பூக்கும் நேரத்தில் மழை முடிந்துவிடுவதால் இயற்கையாகவே நல்ல சூழல் கிடைத்துவிடும். பின் இயற்கையாகவே கிடைக்கும்பனி மற்றும் நிலத்தில் உள்ள ஈரப்பதம் ஆகியவையே அறவடை வரை செடிகளுக்கு போதுமானதாக இருக்கும். வழக்கமாக விதைக்கும் துவரையின் தண்டு பருமனாக இருப்பதால் அறுவடையின்போது அதை வெட்டித்தான் எடுப்பார்கள். ஆனால் கோ.ஆர்.ஜி.7 ரகத்தில் அந்த கஷ்டம் இருக்காது. இதன் தண்டு மெல்லியதாக இருக்கும். அதோடு இந்த ரகம் அதிக உயரம் போகாமல் படர்ந்து வளரும் தன்மை கொண்டது.

அறுவடை செய்த துவரையைக் காயவைத்து தட்டி காயைப் பிரித்துக் கொள்ளலாம். நாற்று நடவு முறையில் ஏக்கருக்கு சராசரியாக 750 கிலோ முதல் ஆயிரம் கிலோ வரை மகசூல் கிடைக்கும். வழக்கமான துவரையில் அதிகபட்சம் 400கிலோ மாதம்தான் கிடைக்கும்.

இறவை முறையில் சாகுபடி செய்யும்போது நாற்று நடவு முறையில் ஏக்கருக்கு 1500 கிலோ வரை கூட மகசூல் எடுக்கலாம். அதிக பராமரிப்பும் இடுபொருட்களும் தேவைப்படாத கோ.ஆர்.ஜி.7 ரகத்தை பச்சைக்காயாக அறுவடை செய்தும் விற்பனை செய்யலாம். 90 நாள் முதல் 150 நாட்கள் வரையிலான பச்சைக்காய்களை அறுவடை செய்வதன் மூலமாக ஒரு ஏக்கரில் 4 டன் முதல் 6 டன் வரை காய்கள் கிடைக்கும். இதை கிலோ 10 ரூபாய் என்ற விலையில் ஓசூர், பெங்களூரு மார்க்கெட்களில் சந்தைப்படுத்தலாம். உள்ளூரிலும் தேவைக்கேற்ப விற்பனை செய்யலாம்.

காய் முற்றியபிறகு பறித்து பருப்பாக மாற்றி விற்கிறபோது ஒரு கிலோ துவரைக்கு 50 ரூபாய் வரை கிடைக்கிறது. தொடர்புக்கு: வேளாண் உதவி இயக்குனர் ரவிபாரதி - 94425 42894 மற்றும் சாவித்திரி - 90472 88744. கோம்பைப்பகுதியைச் சேர்ந்த அனுபவ விவசாயி ரங்கமணி - 98430 62942. (தகவல்: பசுமை விகடன் - 10.8.12, 25.2.13).

## அதிசயம் தந்த அசோலா

அசோலாவில் புரதம், அமினோ அமிலம், கால்சியம், வைட்டமின்கள், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு, தாமிரம், மெக்னீசியம் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் அதிகம் உள்ளன. அசோலாவில் காய்ந்த நிலையில் 30 சதவீதம் புரதச்சத்து உள்ளது. மேலும் 20 சதம் அமினோ அமிலம் உள்ளதால் கால்நடைகளுக்கு செரிமானச் சக்தி தருகிறது.

விளைநிலங்களுக்கு: அண்டை மற்றும் மேலை நாடுகளில் நெல் விளையும் பகுதிகளில் அசோலாவையும் பயன்படுத்தி தழைச்சத்தை நிலைப்படுத்துவதில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். நஞ்சை நிலத்தில் விளையும் நெல்லுக்கு அசோலா உயிர் உரமாக பயன்படுகிறது. இது ஒரு ஏக்கருக்கு 3-4 கிலோ வரை தழைச்சத்தை தரும். இது காற்றில் உள்ள தழைச்சத்தை இழுத்து நெற்பயிர்களுக்கு கொடுக்கும். வயல்களில் களை வளராது. மேலும் யூரியாவினால் எந்த அளவு பயன் உண்டோ அந்த அளவிற்கு பயன் உண்டு. மேலும் மற்ற உரங்கள் பயன்படுத்துவதற்கு பதிலாக அசோலா பயன்படுத்துவதன் மூலம் இயற்கை நெல் உற்பத்தி செய்வதுடன் மண்வளமும் பாதுகாக்கப்படும்.

இனிவரும் காலங்களில் இயற்கை வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு அதிகம் விலை கிடைக்கும். மேலும் சப்போட்டா, மாதுளை செடிகளுக்கும் அடி உரமாக அசோலாவைப் பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தும்போது அதிகப் படியான மகசூல் கிடைக்கும். மேலும் விளைச்சல் பல மடங்கு பெருகும்.

ஆக நெல் விவசாயிகள் மற்றும் பழவகை உற்பத்தியாளர்கள் செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரமான அசோலாவை பயன்படுத்தலாம். இது எல்லா வகையிலும் பயன்படுவதாக அமையும். செலவுகுறைவு. மண்வளம் காத்தல் போன்றவயாகும்.

கால்நடைகளுக்கு: மீன்: மீன் பண்ணைகள் இப்பொழுது பலர் வைத்துள்ளனர். அசோலா அங்கும் பெரும்பங்கு வகிக்கின்றன. மீன் குஞ்சு விட்ட 35 நாட்களுக்கு மேல் 1000 குஞ்சுகளுக்கு தினமும் 2 கிலோ வரை பரவலாக தூவ வேண்டும். இதில் கெண்டை வகை மீன்கள் 100 நாட்களைத் தாண்டும்பொழுது முக்கால் முதல் ஒரு கிலோ வரை எடைகூடும்.

முயல், பன்றி: முயல் பண்ணை வைத்திருப் பவர்களும் அசோலாவைப் பயன்படுத்தலாம். இதனால் பசுந்தீவன பிரச்னை தீரும். ஒரு முயலுக்கு 75-100 கிராம் வரை தரலாம். இதனால் அதிக ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்கத்திற்கு உதவியாய் இருக்கும். பன்றிகளுக்கு தரும்பொழுது அதிக எடை தரக்கூடியதாக இருக்கும். அதிக லாபம் பெற முடியும்.

மாடு, ஆடு, கோழி: மாடுகளுக்கு அசோலா தினமும் ஒன்றரை முதல் இரண்டு கிலோ வரை கொடுக்கலாம். அதனால் அதிகப்படியான பால் கிடைக்கும். மாடுகள் அதிகம் ஆரோக்கியமாக இருக்கும். தவிடு மற்றும் வைக்கோலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 40 சதவீதம் அசோலா பயன்படுத்தலாம். இதனால் உற்பத்தி செலவு குறைவு. பொருட்செலவு கட்டுப் படுத்தப்படுகிறது. அதிக லாபம் கிடைக்கும். செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பவர்கள் அசோலாவைப் பயன்படுத்து வதன்மூலம் அதிகப்படியான வளர்ச்சி மற்றும் அதிக எடை கிடைக்கும்.

கோழிகளுக்கு கொடுக்கும்போது முட்டை அதிக எடை கிடைக்கக்கூடும்.

மனிதர்களுக்கு: மனித வாழ்வின் மாற்றத்தை தரப்போகும் அசோலா கால்நடைகளுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் இதை ஒரு வகை கீரை எனக்கூறலாம். (பெரணி) மேலும் வைரஸ் காய்ச்சல்களை பரப்பும் கொசுக்களை அழிக்கும். இதை வீடுகளில் கூட சிறிய அளவில் வளர்க்கலாம்.

வளர்க்கும் முறை: 2 மீட்டர் அகலம், 4 மீட்டர் நீளம் கொண்ட சில்பாலிதீன் கவர். அதை ஒரு அரை அடி உயரம் கொண்ட பாத்திபோல் அமைத்து அதில் சலித்த செம்மண் ஒரு இஞ்ச் அளவிற்கு சம அளவில் பரப்ப வேண்டும். மேலும் 3 இஞ்ச் அளவிற்கு நீர் நிரப்பி அதில் 10 கிலோ பசுஞ்சாணம் நன்கு கரைத்து விடவேண்டும். பிறகு அசோலா விதைகளை அதில் தூவ வேண்டும். இது 6-7 நாட்களில் அந்த பாத்தி முழுவதுமாக வளர்ந்துவிடும். நமது தேவைக்கேற்ப பாத்திகள் அமைக்கலாம்.

விதைகள் மற்றும் விபரங்களுக்கு அசோலா ஆய்வகம், செட்டிபாளையம், பொள்ளாச்சி-4 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பிற செய்திகளைப் பெறலாம். வேலி மசால் (ஆட்டிற்கு தேவையான) விதைகள் உள்ளன.

இன்றைய வேளாண் செய்திகள்

6.03.2013 A.M

## குறைந்த காற்றழுத்த தாழ்வால் டெல்டாவில் பலத்த மழை



திருச்சி: தென்மேற்கு வங்க கடலில் இலங்கை கடற்கரைக்கு அப்பால் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ள காரணமாக டெல்டாவில் திருவாரூர், நாகை மாவட்டங்களில் பலத்த மழையும், மற்ற மாவட்டங்களில் பரவலாக மழையும் பெய்தது. திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிராம்பட்டினம் பகுதியில் அதிகாலை 3 மணி முதல் நாள் முழுவதும் விட்டுவிட்டு பலத்த மழை பெய்தது. இந்த மழையால் உப்பள பாத்திகளில் மழைநீர் புகுந்து உற்பத்தி பாதிக்கப்பட்டது. திடீர் மழையால் அறுவடை நிலையில் உள்ள சம்பா பயிர்களுக்கு எந்த பயனுமில்லை. அதேசமயம் ஊடுபயிரான உளுந்து மற்றும் பயறு வகை பயிர்கள், மானாவாரி பயிர்களான நிலக்கடலை, எள், சோளம் போன்றவற்றுக்கு பயன் தரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, முத்துப்பேட்டை, நன்னிலம், வலங்கைமான், குடவாசல், நீடாமங்கலம், கோட்டூர் போன்ற பகுதிகளில் பலத்த மழை பெய்தது. முத்துப்பேட்டையில் அதிகளவாக 66.4 மிமீ மழை பெய்தது.பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாக நேற்று காலையில் லேசான தூறல் மழை பெய்தது. குமரி, தூத்துக்குடியிலும் நல்ல மழை பெய்தது.

## வால்பாறையில் கடும் வறட்சியால் தேயிலை மகசூல் குறைந்து 5,000 பேர் வேலை இழப்பு

வால்பாறை : கோடை வறட்சியால் தேயிலை மகசூல் பெருமளவில் குறைந்துள்ளது. இதனால் வால்பாறையில் 5,000 தற்காலிக தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

கோவை மாவட்டம், வால்பாறையில் தனியார் தேயிலை, காபி தோட்டங்கள் 25 ஆயிரம் ஏக்கரும், அரசு தேயிலை தோட்ட கழகத்திடம் ஆயிரம் ஏக்கரும் உள்ளன. 8 ஆயிரம் தற்காலிக தொழிலாளர்கள் உட்பட 30 ஆயிரம் பேர் இவற்றில் பணியாற்றுகின்றனர்.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் புதிய தேயிலை அதிகளவில் விளைவதால் மகசூல் அதிகரிக்கும். அதை பறிக்க தேவையான தொழிலாளர்கள் கிடைக்காமல் பற்றாக்குறை ஏற்படும். இதனால் பல இடங்களில் தேயிலை பறிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். இதற்கு மாறாக கடும்பனி மற்றும் கோடை காலங்களில் மகசூல் குறையும். இதனால் தொழிலாளர்களுக்கு வேலை இருப்பதில்லை.

இக்காலங்களில் நிரந்தர தொழிலாளர்களுக்கு கூடுதல் ஷிப்ட் பணிகள் கொடுப்பது தவிர்க்கப்படுகிறது. தற்காலிக தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தப்படுகிறது. கடந்த சில நாட்களாக தற்காலிக தொழிலாளர்கள் படிப்படியாக வேலை இழப்பிற்கு ஆளாகி வருகின்றனர். இதுவரை 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட தற்காலிக தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.


## ஜனவரி, பிப்ரவரியில் 59,288 டன் காபி ஏற்றுமதி



புதுடெல்லி : கடந்த 2 மாதங்களில் காபி ஏற்றுமதி 5 சதவீதம் உயர்ந்து, 59,288 டன்னாக உள்ளது. இது குறித்து, காபி போர்டு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டதாவது:
2012ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மொத்தம் 56,535 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதே 2 மாதங்களில் இது 5 சதவீதம் உயர்ந்து, 59,288 டன்னாக உள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் பார்க்கும் போது, ஏற்றுமதி ரூ.857 கோடியில் இருந்து ரூ.891 கோடியாக உயர்ந்துள்ளது.

அதிகபட்சமாக இத்தாலிக்கு 14,054 டன்னும், ஜெர்மனிக்கு 5,985 டன், ரஷ்யாவுக்கு 5,136 டன் என காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, அரேபிகா ரகம் அதிகமாக ஏற்றுமதியாகியுள்ளது. 2012,13 பயிர் ஆண்டில்(அக்டோபர்,செப்டம்பர்), 3 லட்சத்து 15,500 டன் காபி உற்பத்தியாகியுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை சரிவு 345 காசாக நிர்ணயம்



நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில், முட்டை விலையில் 15 காசுகள் குறைக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 360 காசுகளாக இருந்த முட்டை விலை 345 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி கூறியதாவது: தமிழகத்தில் முட்டை விற்பனை குறைந்துள்ளது. விற்பனையை அதிகரிக்க விலையை குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பண்ணை கொள்முதல் விலை 345 காசு என்றாலும், மைனஸ் 30 பைசா என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் ஒரு முட்டையை ரூ.3 முதல் ரூ.3.10 விலையில்தான் வாங்குகிறார்கள். எனவே, பண்ணையாளருக்கு முட்டை விற்பனையில் இழப்பு

ஏற்படுகிறது. கடைகளில் ரூ.3.50 வரை விற்பனை செய்யலாம். இவ்வாறு நல்லதம்பி தெரிவித்தார். ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.46 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.58 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## பசுந்தேயிலைக்கு உரிய விலை நிர்ணயிக்க கோரிக்கை

குன்னூர், : நீலகிரி மாவட்ட தேவேந்திர குலவேளாளர் சங்க பொதுக்குழு கூட்டம், குன்னூரில் நடந்தது. சங்கர் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் அமுல்ராஜ், செயலாளர் முருகபாண்டியன், பொருளாளர் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மே மாதம் 5ம் தேதி நடைபெறவுள்ள தந்தி மாரியம்மன் கோயில் விழாவை சிறப்பாக நடத்துவது. உழிச்சல் பேரூராட்சிக்குட்பட்ட பாரதிநகர் பகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, அளக்கரை நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தவது, மாவட்டத்தில் இயங்கும் பழுதடைந்த பஸ்கள் நீக்கி விட்டு, புதியபஸ்களை இயக்க வேண்டும். பசுந்தேயிலைக்கு உரிய விலையை நிர்ணயம் செய்து, 63 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் நலனில் தேயிலை வாரியம் அக்கறை காட்ட வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## செயல்விளக்க திட்டத்தில் உளுந்து பயறு சாகுபடி விவசாயிகளுக்கு சலுகை 5 வட்டாரம் பயன்பெறும்

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் பயறு சாகுபடி செயல்விளக்க திட்டத்தின் கீழ் 5 வட்டாரங்களில் உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய சலுகை வழங்கப்பட உள்ளதாக வேளாண் இணை இயக்குநர் சேகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறுவகை திட்டத்தின் ஒரு அங்கமாக அதிவிரைவு பயறு பெருக்க திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் திருச்சி மாவட்டத்தில் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி மற்றும் மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் நஞ்சை தரிசு உளுந்து பயிரிடும் கிராமங்களில் 100 எக்டேரில் செயல்விளக்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செயல்விளக்கங்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ.4,800 மதிப்பிலான விதை மினிகிட், உயிர் உரங்கள், பயறுவகை நுண்சத்து உரம், ஜிப்சம், டிஏபி உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் முழு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பாசன நீர் கொண்டு செல்லும்

குழாய்கள் ஒரு யூனிட்டுக்கு ரூ.15ஆயிரம் வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. பாசன நீரை சிக்கனமாக பயிருக்கு அளிக்க நடமாடும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் ஒரு யூனிட்டுக்கு ரூ.12,500 வீத மானியத்திலும், சாதாரண தெளிப்பு நீர் பாசன கருவிகள் ஒரு யூனிட்டுக்கு ரூ.7,500 வீத மானியத்திலும் வழங்கப்படுகிறது என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

6.03.2013 A.M

## மகசூல் குறைந்து விலையும் சரிந்தது: மக்காச்சோள சாகுபடி விவசாயிகள் கவலை

கண்டமனூர்,

கண்டமனூர் சுற்று வட்டார பகுதிகளில் மக்காச்சோள சாகுபடி செய்த விவசாயிகள், மகசூல் குறைந்த நிலையில் மக்காச் சோள விலையும் சரிந்துள்ளதால் கவலை அடைந்துள்ளனர்.

மக்காச்சோள சாகுபடி

தேனி மாவட்டம், கண்ட மனூர், அம்பாசமுத்திரம், கோவிந்தநகரம், குப்பிநாயக் கன்பட்டி, நாகலாபுரம், வெங்கடாசலபுரம் உள்பட பல்வேறு கிராமங்கள் உள்ளன. இந்த பகுதியில் உள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி சாகுபடியாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு போதிய அளவு மழை இல்லாத தால் இந்த பகுதிகளில் மக்காச் சோள சாகுபடி செய்ய விவ சாயிகள் ஆர்வம் காட்ட வில்லை. குறிப்பாக இந்த பகுதிகளில் கிணற்று பாசனத்தை பிரதானமாக நம்பி உள்ள சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மட்டும் மக்காச்சோள சாகுபடி கடந்த 6 மாதங்களுக்கு முன்பு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் மக்காச் சோள மகசூலும் தற்போது குறைந்து காணப்படுகிறது. குறிப்பாக 3 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட நிலை யில், சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே கதிர் அறுவடைக்கு வந்துள்ளது. மற்ற நிலங்களில் மக்காச்சோள கதிர்கள் மழையின்றி மகசூல் கிடைக்கவில்லை.

விவசாயிகள் கவலை

தற்போது மகசூல் குறைந்துள்ள நிலையில், விலை உயரும் என்று எதிர்பார்த்து இருந்த விவசாயிகள் மக்காச்சோள விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,300-ஆக குறைந்துள் ளதால்

மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.1,650-க்கு விற்பனை ஆனது குறிப்பிடத் தக்கது.

இது குறித்து மக்காச்சோள சாகுபடி செய்த விவசாயிகள் கூறும் போது,Ôதனியார் கோழி நிறுவனங்கள் வெளிமார்க் கெட்டில் மக்காச்சோள தீவனத்தை வாங்குகின்றனர். அதே நேரத்தில் உள்ளூர் வியா பாரிகளும் மக்காச் சோளத்தை வாங்க ஆர்வம் காட்டாததால், விலை சரிந்து உள்ளது. இதனால் மக்காளச் சோளத்தை சாகுபடி செய்த விவசாயிகளே இருப்பு வைக்கும் நிலை ஏற் பட்டுள் ளதுÕ என்றார்கள்.

## தேனி மாவட்டத்தில் மானிய விலையில் கதிர் அடிக்கும் இயந்திரம் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வழங்கப்பட்டது

உப்புக்கோட்டை,

தேனி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் கதிர் அடிக்கும் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் பொதுப்பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரமும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ரூ. 1 லட்சத்து 80 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் உத்தம பாளையம் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகம் மூலம் பயனாளி ஒருவருக்கு மானிய விலையில் கதிர் அடிக் கும் இயந்திரம் வழங்கப் பட்டது.  இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் உதவி செயற் பொறியாளர் முகமது அலி பயனாளி ஒருவருக்கு கதிர் அடிக்கும் இயந்திரத்தை வழங்கினார். நிகழ்ச்சியில், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் ராதா கிருஷ்ணன், ரேணுகா தொழில் நிறுவன உரிமையாளர் வெங்கட சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நடப்பு நிதி ஆண்டில் இதுவரை கோதுமை ஏற்றுமதி 40 லட்சம் டன்

புதுடெல்லி,

நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரி 22–ந் தேதி வரையிலுமாக 40.30 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதியாகி உள்ளது. இதில் 50 சதவீத கோதுமை அரசின் கையிருப்பில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2009–10 மற்றும் 2010–11–ஆம் நிதி ஆண்டுகளில் கோதுமையை ஏற்றுமதி செய்யாமல் அரசு கிடங்குகளில் வைக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், 2011–12–ஆம் நிதி ஆண்டில் கோதுமை அமோக விளைச்சல் ஆகியிருந்ததால், 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசு பகிரங்க பொது உரிமத்தின் கீழ் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியது. மேலும் அரசுக் கிடங்கில் இருந்து 2012–ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**<u>ஆப்கானிஸ்தான்</u>**

நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து 20.70 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் மனிதாபிமான அடிப்படை உதவியாக ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு 35,000 டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது. அதேபோல், 2011–12–ஆம் நிதி ஆண்டில் மொத்தம் 7.41 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் 1 லட்சம் டன் கோதுமை மனிதாபிமான அடிப்படையில் ஆப்கானிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்று மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிப்ரவரி 1–ந் தேதி வரை மத்திய கிடங்கில் தேவைப்பாட்டுக்கும் அதிகமான அளவு 3.08 கோடி டன் கோதுமை கையிருப்பில் உள்ளது. கடந்த 3 வருடங்களில் அரசுக் கிடங்கில் மொத்தம் 16,386 டன் கோதுமை பயன்பாட்டுக்கு உதவாத வகையிலும், சேதமுற்ற நிலையில் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.